**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள்.

(மத்தேயு 2:2)

**இன்றைய வாசகங்கள்:**

2 சாமுவேல் 5: 1-3;

திருப்பாடல்: 122: 1-2, 4-5;

கொலோசையர்: 1: 12-20;

லூக்கா: 23: 35-43.

இன்றைய வாசகங்கள் கிறிஸ்துவின் அரசாட்சியை சுட்டிக்காட்டுகின்றன. முதலாவது தாவீது அரசர், இயேசுவை யூதாவின் அரசராக முன்னறிவித்தார். இஸ்ரயேலை வழிநடத்த இவர் தகுதியானவர் இஸ்ரயேலின் அனைத்துக் கோத்திரங்களும், அரசராக தாவீதை, ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர். இஸ்ரயேலின் அரசர்களிலேயே மிகச்சிறந்தவர் தாவீது அரசர். தாவீது அரசரின் கதையும் தாவீதின் பாவத்தைத் தவிர்த்து, இயேசு என்னும் நபரின் கதையும் ஒரே மாதிரியாக இணைந்து செல்கிறது. வரவிருந்த மீட்பரின் அடையாளமாக தாவீது அரசர் கருதப்பட்டார்.

இரண்டாவதாக, அது முதலில் கிறிஸ்துவின் பிறப்புக்கு முன் அறிவிக்கப்படுகிறது. இயேசு கண்ணால் காணமுடியாத கடவுளின் சாயல் மற்றும் படைப்புகளுக்கெல்லாம் முன் பிறந்தவர். ஏனென்றால் எல்லாமே அவரில், அவர் மூலம், அவருக்காகப் படைக்கப்பட்டன. பின்னர் அது கிறிஸ்துவின் உலக வாழ்க்கையைப் பற்றி விவரிக்கின்றது. கிறிஸ்து திருஅவையின் தலைவர். தொடக்கமுமானவர். மரித்தோரிலிருந்து முதலில் உயிர்த்தெழுந்தவர். மற்றும் அனைத்து வழியிலும் அவரே உயர்ந்தவர் என்று நமது நம்பிக்கையைப் பவுல் மிகசுருக்கமாகக் கூறுகிறார். சிலுவை மரணத்தின் மூலம் நாம் அவரோடு ஒப்புரவானோம். அவர் வழியாகத் தான் அமைதி உண்டு. **இயேசுவின் அரசு பணி, தியாகம் மற்றும் மக்களுக்கான அன்பைக் கொண்டுள்ளது.**

நற்செய்தி வாசகத்தில், அவர் மெசியாவும் யூதர்களின் அரசனும் என்று அழைக்கப்பட்டதால், மக்களும், படைவீரர்களும், கள்வர்களும் கூட அவரை ஏளனம் செய்தனர் என்று வாசிக்கின்றோம். இருந்தபோதும் இயேசுவோடு அறையப்பட்ட அந்த ஒரு கள்வன் மட்டும், அவர் இயேசு மீட்பர் என்று நம்பிக்கைக் கொண்டு, இயேசு விண்ணரசுக்கு செல்லும்போது தன்னையும் நினைவுகூருமாறு தம் நம்பிக்கையை அறிக்கையிடுகின்றான். அவனுடைய வார்த்தைகளில் ஆழமான பொருள் பொதிந்துள்ளது. இயேசு விண்ணக மண்ணக அனைத்துலக அரசர். அவர் மீட்பர், அரசர் என்றும், அவரின் மாட்சியையும், அருளையும் உலகிற்கு அறிவிப்பதற்கான அழைப்பை நாம் அறிந்துகொள்ள இது ஒரு வாய்ப்பாகவும் சவாலாகவும் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. அவர் நம் வாழ்வில் பிரசன்னமாக இருப்பதற்கும், ஒவ்வொருநாளும் அவர் நமக்காக செய்யும் அனைத்திற்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 47/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

13 நவம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 34ஆம் ஞாயிறு
(இயேசு கிறிஸ்து அனைத்துலகின் அரசர் பெருவிழா)

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:
**உலக இளையோர் தினம் (நவம்பர் 20)**



# கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் அரசராக வீற்றிருக்கிறாரா?

இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இந்தப் பெருவிழா நாத்திகம் மற்றும் மதச்சார்பின்மைக்குப் பதிலளிக்கும் விதமாக, திருத்தந்தை பதினொன்றாம் பத்திநாதரால் 1925 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கிறிஸ்துவின் மாட்சிமிக்க ஆட்சிக்கும், கொண்டாட்டத்திற்கும் அழைப்புவிடுக்கும் வகையில் இந்த விழா அமைந்தது.